மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவ்வப் பொழுது அவர்களுடைய வேலைப்பளுவைப் பரிசீலித்து, வேலைப் பளு அதிகமாக இருக்குமானால் உடனடியாக தேவையான அளவிற்கு வார்டர்களை நியமிப்பது என்று ஒரு முடிவெடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு பார்ட் இரண்டு ஸ்கீமில் இது போன்று அதிகமான அளவிற்கு வார்டர்கள் தேவை என்று எழுதியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 196–ம், 197–ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

Operation of Pump-sets with Alcohol

* 198 *Q*.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Engineers of Agriculture Department experimented on the operation of pumpsets with alcohol; and

(*b*) if so, the details thereof ?

சாராயத்தின் மூலம் விசை ஏற்ற இயந்திரங்களை இயங்கச் செய்தல்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாராயத்தின் மூலம் விசை ஏற்ற இயந்திரங்களை இயங்கச் செய்ய, விவசாயப் பிரிவு பொறியாளர்கள் முயன்றது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அளிக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பில், இது பரிசீலனை அளவில் இருப்பதாகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றது. எப்போது அந்த ஆய்வு முடிந்து, அது பரீட்சார்த்தமாக வரும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இன்றைய நெருக்கடியான நிலையில் இதிலே விரைவான நடவடிக்கை எடுத்தால், விவசாயிகளுக்கு இது லாபகரமாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

@ ~~86—87~~ 373-374 ஆம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 27

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது பற்றிய சோதனைகள் எல்லாம் முடிந்து விட்டன. இதிலே என்ஜின்கள் ஓடுகின்றன என்பதையும் பார்த்தாகிவிட்டது. நமது வேளாண்மைத்துறையில் உள்ள தொழிற்சாலையில் ஐந்து எஞ்ஜின்கள் இருக்கின்றன. இதை உபயோகித்து அவற்றைக்கூட ஓட்டிப் பார்க்கலாம். ஆனால் இந்த எரி சாராயத்தை, வேளாண்மைத் துறையில் உள்ள பம்பு செட்டுக்களாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. காரணம் எரி சாராயம் ப்ளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாகத் தேவைப்படுகின்றது. ஆகவே, பம்பு செட்டுக்களுக்கு டீசல் எண்ணெயையே உபயோகித்துக்கொண்டு, எரி சாராயத்தைத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 199 ஒத்திவைக்கப்படுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் ஏற்பட்டுள்ள கலகம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "24—3—1975 இரவு முதல் 25—3—1975 மத்தியானம் வரையில் தொடர்ந்து சென்னையிலுள்ள சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் கலகம் ஏற்பட்டு சில வெளியாரி களின் உதவியுடன் சில மாணவர்கள் உள்ளே சென்று பல மாணவர்களின் அறைகளிலுள்ள பூட்டுக்களையும் பெட்டிகளையும் உடைத்து சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் வரை பெறக்கூடிய சாமான்களையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு போய் விட்டார்கள். மாணவர்களிலும் சிலருக்கு இரத்த காயம் ஏற்பட்டு, சென்னை அரசாங்கப் பொது ஆஸ்பத்திரியிலும், வெளியிலும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். போலீசுக்குத தகவல் கொடுத்தும் சரியான நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் அதைப்பற்றி விவாதித்து மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டிய தன் அவசியத்தைக் குறித்து விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்"

என்ற ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. கே. ராஜாராம் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வரும் என்பதை அவர் சுருக்கமாக விளக்கிப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.